இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in  murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 317 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 14 – ஞாயிற்றுக்கிழமை 28 ஜூன் 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 317 : Thiruvalluvar Year - 2057 - Aani 14 - Sunday 28 June 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00

## ‘பயிர்க்கடன் தள்ளுபடி’ என ஏமாற்று அறிவிப்பு! மேட்டூர் அணை திறக்கப்படாததால் டெல்டா மாவட்டங்களில் நெற்பயிர்கள் கருகும் கொடுமை!

# த.வெ.க. அரசுக்கு எதிராக விவசாயிகள் கொந்தளிப்பு!

## அலட்சியம் காட்டும் ‘ரீல்ஸ்’ அரசைக் கண்டித்து – தொடரும் போராட்டங்கள்!



கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள், நேற்று முன்தினம் (26.06.2026) திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து, ஜூலை 13ஆம் நாள் – தனது பிறந்தநாளன்று, டெல்லியில் நடைபெறவுள்ள 60ஆவது ‘ஞானபீட விருது’ வழங்கும் விழாவில், தனக்கு ‘ஞானபீட விருது’ வழங்கப்பட இருப்பதைத் தெரிவித்து, அதற்கான அழைப்பிதழை வழங்கினார். கழகத் தலைவர் அவர்கள், கவிப்பேரரசு வைரமுத்து அவர்களை வாழ்த்தினார்.

**தஞ்சை, ஜூன் 28-**

**விஜய் ஆட்சியில் ஏமாற்றம் மட்டுமே கிடைத்ததாக விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர். விவசாயம் பற்றி விஜய் அரசுக்கு எதுவும் தெரியவில்லை என்றும் ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.**

விவசாயம் பற்றி விஜய் அரசுக்கு எதுவும் தெரியவில்லை. அதிகாரிகள், அமைச்சர்கள் யாரும் சென்று அவதியுறும் விவசாயிகளைப் பார்க்கவில்லை. தடையற்ற மும்முனை மின்சாரம் வழங்கப்படவில்லை. அதனால் வாடிய பயிர்களுடன் விவசாயிகள் கண்ணீர் வடிக்கின்றனர்!

### பயிர்க்கடன்: விஜய் அரசு மோசடி!

திருவாரூர் உள்பட டெல்டா மாவட்டங்களில் காவிரி தண்ணீர் கிடைக்காமல் பயிர்கள் கருகி வருகின்றன. வாடிய முகத்துடன் இருக்கும் விவசாயிகளைப்





பற்றி விஜய் அரசுக்கு எந்தவித அக்கறையும் இல்லை

> **திருவாரூர் உள்பட டெல்டா மாவட்டங்களில் காவிரி தண்ணீர் கிடைக்காமல் பயிர்கள் கருகி வருகின்றன. வாடிய முகத்துடன் இருக்கும் விவசாயிகளைப் பற்றி விஜய் அரசுக்கு எந்தவித அக்கறையும் இல்லை என்று குற்றம் சாட்டியுள்ளனர். மும்முனை மின்சாரம் வழங்கப்படவில்லை.**
>
> **பயிர்க்கடன் தள்ளுபடியில் த.வெ.க. அரசு செய்த மோசடிகள், தங்களை சொல்லில் அடங்காத வேதனையில் ஆழ்த்தியுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். விஜய் ஆட்சியில் தாங்கள் அகதிகளாகச் செல்லும் அவலம்தான் ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் கண்ணீர் வடிக்கின்றனர்.**

என்று குற்றம் சாட்டியுள்ளனர். மும்முனை மின்சாரம் வழங்கப்படவில்லை.

பயிர்க்கடன் தள்ளுபடியில் த.வெ.க. அரசு செய்த மோசடிகள், தங்களை சொல்லில் அடங்காத வேதனையில் ஆழ்த்தியுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். விஜய் ஆட்சியில் தாங்கள் அகதிகளாகச் செல்லும் அவலம்தான் ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் கண்ணீர் வடிக்கின்றனர்.

### வாக்குறுதிகளை மறந்துவிட்டதா அரசு?

தேர்தல் காலத்தில் விவசாயிகளின் தோளில் கைபோட்டு வாக்குறுதிகளை அள்ளி வழங்கிய த.வெ.க. அரசு, ஆட்சிக்கு வந்த பிறகு அந்த வாக்குறுதிகளை மறந்துவிட்டதா என்ற கேள்வியை எழுப்பும் வகையில், திருவள்ளூர் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## தனியாருக்கு டெண்டர் - எதிர்ப்புக்குப் பணிந்தது!

# தூய்மைப் பணிகளை தனியார் மயமாக்கும் முடிவில் பின்வாங்கிய த.வெ.க. அரசு!

## தூய்மைப் பணியாளர்கள் போராட்டத்திற்கு வெற்றி!

சென்னை, ஜூன் 28-

எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புகளுக்கு பணிந்து, மாநகராட்சிகளின் தூய்மைப் பணிகளை தனியார் மயமாக்கும் திட்டத்திற்கான டெண்டரை த.வெ.க. அரசு ரத்து செய்துள்ளது.

தமிழ்நாட்டில் ஆவடி, தாம்பரம், வேலூர், ஓசூர், கோவை, திருப்பூர், மதுரை உள்ளிட்ட 12 மாநகராட்சிகளில் தூய்மை பணிகளை தனியாருக்கு ஒப்படைப்பது தொடர்பாக, சாத்தியக்கூறு அறிக்கை தயார் செய்ய த.வெ.க. அரசு உத்தரவிட்டிருந்தது. இதற்காக, தனியார் நிறுவனங்களிடம் த.வெ.க. அரசு ஒப்பந்தப் புள்ளிகளை கோரியிருந்தது.

ஏற்கனவே, ஒப்பந்த அடிப்படையில் உள்ள பணியாளர்களை, பணி நிரந்தரம் செய்யக்கோரி தூய்மைப் பணியாளர்கள் வலியுறுத்தி வரும் நிலையில், த.வெ.க. அரசின் இந்த நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது.

தூய்மைப் பணியை தனியார் மயமாக்கினால் வாழ்வாதாரம் பாதிக்கும் என்பதால், த.வெ.க. அரசின் முடிவைக் கண்டித்து, தூய்மைப் பணியாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் குதித்தன. மேலும், த.வெ.க. அரசின் நடவடிக்கைக்கு தி.மு.க. உள்ளிட்ட எதிர்க் கட்சிகளும் கடும் எதிர்ப்பினை தெரிவித்தன.

இந்த நிலையில், தூய்மைப் பணியாளர்களின் போராட்டம் மற்றும் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்புக்கு பணிந்த த.வெ.க. அரசு, 12 மாநகராட்சிகளில் தூய்மைப் பணிகளைத் தனியார்மயமாக்கும் திட்டத்திற்காக விடப்பட்ட டெண்டரை ரத்து செய்து உத்தரவிட்டுள்ளது.

## FCRA திருத்த மசோதாவை எதிர்த்து

# தமிழ்நாடு முழுவதும் இன்று - தேசிய உண்ணாவிரதம்!

## ஜூலை 3ல் சிறுபான்மையினர் கூட்டமைப்பு போராட்டம் – பி.வில்சன் எம்.பி. அறிவிப்பு!

சென்னை, ஜூன் 28-

வெளிநாடு நிதிப் பங்களிப்பு ஒழுங்குமுறை திருத்த சட்டமசோதாவுக்கு எதிராக, ஜூலை 3 ஆம் தேதி நாடு தழுவிய அளவில் போராட்டம் நடத்தப்படும் என்று சிறுபான்மையினர்கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

சிறுபான்மையினருக்கான கூட்டு நடவடிக்கை மன்றத்தின் சார்பில் தி.மு.க. எம்.பி. பி.வில்சன், சென்னை சேப்பாக்கத்தில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர், FCRA திருத்த சட்ட மசோதா மூலம் சிறுபான்மையினரின் கல்வி நிலையங்களும் அதன்மூலம் பயன்பெறும் இளைஞர்களும் கடுமையாக பாதிக்கப்படுவார்கள் என்று கூறினார்.

வெளிநாட்டு பங்களிப்புடன் பராமரிக்கப்படும் தேவாலயங்களை இதன் மூலம் ஒன்றிய அரசு கட்டுப்படுத்தும் அபாயம் இருப்பதுடன், சிறுபான்மையினரின் சொத்துக்களை பறிக்கும் வகையில் அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிராக ஒன்றிய பா.ஜ.க. அரசு திருத்த மசோதாவை கொண்டு வந்துள்ளதாக குற்றம் சாட்டினார்.

எஃப், சி.ஆர்.ஏ. திருத்த மசோதாவுக்கு எதிராக நாடு முழுவதும் இன்று தேதி உண்ணாவிரதம் அனுசரிக்க முடிவு செய்துள்ளதாகவும், தொடர்ச்சியாக ஜூலை 3ம் தேதி தேசிய அளவில் போராட்டம் நடத்தப்படும் என்றும் சிறுபான்மையின கூட்டமைப்பு சார்பில் பி. வில்சன் எம்.பி. தெரிவித்தார்.

# லண்டனில் சர்வதேச தொல்லியல் மாநாடு!

## கீழடி அகழாய்வு குறித்து தொல்லியல் துறை அதிகாரிகள் விளக்கம்!

லண்டன், ஜூன் 28 -

லண்டனில் நடைபெற்ற சர்வதேச தொல்லியல் மாநாட்டில், கீழடி அகழாய்வு தொடர்பாக தமிழக தொல்லியல் துறை அதிகாரிகள் அளித்த விளக்கம் உலக தொல்லியல் ஆய்வாளர்களிடையே வரவேற்பை பெற்றுள்ளது.

கீழடியில் கடந்த 2014ம் ஆண்டு தொடங்கிய அகழாய்வில், தங்க அணிகலன்கள், எழுத்துப் பொறிப்புகள், நாணயங்கள் உள்ளிட்ட 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொல்லியல் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், லண்டன் யூசிஎல் தொல்லியல் மையத்தில் நடைபெற்ற மாநாட்டில் 40 நாடுகளைச் சேர்ந்த ஆய்வாளர்கள் பங்கேற்றனர்.

இதில் தமிழக தொல்லியல் துறை இணை இயக்குநர் சிவானந்தம் மற்றும் கீழடி அகழாய்வு தள இயக்குநர் ரமேஷ் ஆகியோர் பங்கேற்று, கீழடியில் கிடைத்த பழங்கால மரம், கல், இரும்பு கருவிகள் மற்றும் அக்கால மக்களின் வாழ்வியல் குறித்து உரையாற்றினர்.

கீழடி அகழாய்வு தொடர்பான புதிய தொல்லியல் ஆதாரங்கள் குறித்து அவர்கள் விளக்கியது சர்வதேச அளவில் கவனம் பெற்றுள்ளது.